| | | |
|---|---|---|
| அ.வ.எண் | : | 143/2017 |
| தேதி | : | 10/02/2020 |
| பெயர் | : | ராஜாராம் |
| நேரம் | : | பிற்பகல் 12.17 முதல் 12.45 |

<u>வா.த.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா சொத்து ஆலப்ப நாயக்கருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் முதலில் ஆலப்ப நாயக்கர் சுப்பிரமணிக்கு தாவா சொத்தினை எழுதிக்கொடுத்தார் பின்னிட்டு சுப்பிரமணி ஆலப்ப நாயக்கருக்கு எழுதிக்கொடுத்தார் அதன் மூலம் ஆலப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 04.06.1971 ம் தேதியிட்ட ஆலப்ப நாயக்கர் , சுப்பிரமணிய நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் எனது மூலம் **பி.த.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 14.08.1990 ம் தேதியிட்ட ஆலப்ப நாயக்கர் சுப்பிரமணிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகல் எனது மூலம் **பி.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி2 ஆவணத்தின் அடிப்படையில் தான் ஆலப்ப நாயக்கர் என் தம்பி மோகன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தின் மூலம் தான் நான் என் தம்பி மோகன் என்பவரிடமிருந்து தாவா சொத்தினை கிரயம் பெற்றேன் அது எனது தரப்பில் ஏற்கனவே ஏ1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ1 ஆவணத்தில் பொது அதிகார பத்திர முன்னிலைக்கு தான் தாவா சொத்தினை எனக்கு கிரயம்

கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ2 ஆவணத்தில் ஆலப்ப நாயக்கர் என் தம்பி மோகனுக்கு எழுதிக்கொடுக்கும் போது எனக்கு 55 வயது ஆகிய காரணத்தினால் தாவா சொத்தினை பராமரிக்க இயலாது எனவே மோகன் என்பவர் பொது அதிகார பத்திரத்தின் படி தாவா சொத்தினை பொறுத்து செயல்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 15.05.1998 ம் தேதியிட்ட ஆலப்ப நாயக்கர் மோகன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரத்தின் அசல் ஆவணம் எனது மூலம் **பி.த.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏ13 ஆவணம் தாவா சொத்தின் பேரில் என் பெயரில் பெற்ற சிட்டா ஆகும். ஏ13 ஆவணத்தில் தாவா சொத்தின் தன்மை நன்செய் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் எனக்கு நன்செய் மற்றும் புன்செய் நிலத்தின் தன்மை பற்றி தெரியுமென்றால் சரிதான். மேலும் நன்செய் நிலம் என்பது நீர் பாய்ச்சும் நிலம் என்றாலும், புன்செய் என்பது மேட்டு பயிர் செய்யக்கூடிய நிலமென்றாலும் என்றாலும் எனக்கு தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக இடைக்கால தடையுத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பின்னிட்டு தடையுத்தரவு கேட்ட இடைக்கால மனுவின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து நாங்கள் பெற்றிருந்த ஒருதலைப்பட்ச தடையுத்தரவானது முடிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கினை பொறுத்து காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் உரிமையியல் நீதிமன்றத்தில் நடத்த வேண்டுமென்று காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் எண்.2 ல் வழக்கு மாறுதல் செய்ய Tr.op.No.75/2015 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்னிடம் காட்டப்படும் மனு அது தான் என்றால் சரிதான். அது எனது மூலம் **பி.த.சா.ஆ .4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி Tr.op.No.75/2015 என்ற

மனுவினை இதே நீதிமன்றத்தில் வழக்கினை நடத்த வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதி துரைசாமி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் நினைவிலில்லை. காலூர் கிராமத்தில் உள்ள ஒரு வெள்ளை நாயக்கர் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. காலூர் கிராமத்தின் தலைவர் அசோகன் என்பவரை எனக்க தெரியும். காலூர் கிராமத்தின் தலைவர் அசோகன் என்பவரின் தந்தை வெள்ளை நாயக்கரை எனக்கு தெரியாது. காலூர் கிராமத்தினை சேர்ந்த ராமதாஸ் என்பவரையும் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தினை வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் ஆவணம் பார்த்து வாங்கினேனா என்றால் வாங்கியுள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 07.11.1960, 31.12.1962 ஆகிய தேதிகளில் வெள்ளை நாயக்கர் மற்றும் ஒரு வேங்கையம்மாள் என்பவர்கள் தாவா சொத்தினை கிரயம் பெற்று அனுபவித்து பின்னிட்டு 12.01.1976 ம் தேதியிட்ட ஒரு ராமதாஸ் என்பவருக்கு தாவா சொத்தினை கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றாலும், மேலும் ராமதாஸ் என்பவர் காலமான பின் அவரின் வாரிசுகள் சுந்தரியம்மாள், சரவணன், புவனேஸ்வரி ,தனலட்சுமி,ராஜேஸ்வரி மற்றும் சங்கரி என்பவரிடத்திலிருந்து இவ்வழக்கின் பிரதிவாதி 18.12.1997 ம் தேதியில் கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் மூலம் பிரதிவாதி கிரயம் பெற்று பிரதிவாதி பெயரில் பட்டா எண் 4 பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேலும் தாவா சொத்தினை பிரதிவாதி முறையாக கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் தாவா சொத்திற்கும் எனக்கும் எவ்வகையிலும் சம்மந்தம் கிடையாது என்றாலும், தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றாலும் சரியல்ல.